


முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் 6.10.2025 அன்று தலைமைச் செயலகத்தில், பொது மற்றும் மறுவாழ்வுத் துறை சார்பில் விருதுநகர், திருவண்ணாமலை, தூத்துக்குடி மற்றும் சிவகங்கை ஆகிய மாவட்டங்களில் உள்ள 8 இலங்கைத் தமிழர் மறுவாழ்வு முகாம்களில் 44 கோடியே 48 இலட்சத்து 65 ஆயிரம் ரூபாய் செலவில் கட்டப்பட்டு, 6 கோடியே 58 இலட்சத்து 19 ஆயிரம் ரூபாய் செலவில் அடிப்படை வசதிகள் செய்துகொடுக்கப்பட்டுள்ள 772 புதிய வீடுகளை திறந்து வைத்தார். இந்த நிகழ்ச்சியில், அமைச்சர்கள் எ.வ.வேலு, சா.மு.நாசர், தலைமைச் செயலாளர் நா.முருகானந்தம் உள்பட அரசு உயர் அதிகாரிகள் கலந்து கொண்டனர்.



முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் 6.10.2025 அன்று தலைமைச் செயலகத்தில், தமிழ்நாடு கட்டுமானத் தொழிலாளர்கள் நலவாரியத்தில் பதிவு பெற்ற தொழிலாளர்களுக்கு கட்டுமானம், கம்பி வளைப்பு, தச்சு, மின்பணியாளர் உள்ளிட்ட தொழிற்பிரிவுகளில் திறன் மேம்பாட்டு பயிற்சி பெற்ற தொழிலாளர்களுக்கு ஊக்கத்தொகை மற்றும் சான்றிதழ்களை வழங்கினார். இந்த நிகழ்ச்சியில், அமைச்சர் சி.வி.கணேசன், தலைமைச் செயலாளர் நா. முருகானந்தம், பொன்.குமார் மற்றும் அரசு உயர் அலுவலர்கள் கலந்து கொண்டனர்.



முதலமைச்சர் மு.க. ஸ்டாலின் அவர்கள் 6.10.2025 அன்று தலைமைச் செயலகத்தில், அரசு தொழிற்பயிற்சி நிலையங்களில் பயிற்சி பெற்று 2025ஆம் ஆண்டு அகில இந்திய தொழிற் தேர்வில், இந்திய அளவில் பல்வேறு தொழிற் பிரிவுகளில் முதலிடம் பெற்ற தமிழ்நாட்டைச் சேர்ந்த 40 மாணவ – மாணவியர் சந்தித்து வாழ்த்துப் பெற்றனர். உடன் அமைச்சர் சி.வி.கணேசன், தலைமைச் செயலாளர் நா.முருகானந்தம் மற்றும் அரசு உயர் அதிகாரிகள் உள்ளனர்.




முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்களை 6.10.2025 அன்று தலைமைச் செயலகத்தில், முன்னாள் படைவீரர் நலத்துறை இயக்குநர் கே.பாலசுப்ரமணியம் சந்தித்து, ஒன்றிய பாதுகாப்புத் துறையின் சார்பில் புதுதில்லியில் நடைபெற்ற தேசிய மாநாட்டில், தமிழ்நாடு முன்னாள் படைவீரர் நலத்துறை அளித்துள்ள சிறந்த பங்களிப்பை அங்கீகரிக்கும் விதமாக வழங்கப்பட்ட பாராட்டுச் சான்றிதழ் மற்றும் முற்போக்கு மாநிலம் தமிழ்நாடு முன்னாள் படைவீரர் நலத்துறை என்பதற்கான கேடயம் (Progressive State – Rajya Sainik Board, Tamil Nadu) ஆகியவற்றை காண்பித்து வாழ்த்துப் பெற்றார். இந்த நிகழ்வில், அமைச்சர் திருமதி என்.கயல்விழி செல்வராஜ், தலைமைச் செயலாளர் நா.முருகானந்தம் உள்பட அரசு உயர் அதிகாரிகள் கலந்துகொண்டனர்.



தமிழ்நாடு வீட்டு வசதி, மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத்துறை அமைச்சர் சு.முத்துசாமி, ஈரோடு மாவட்டம், பவானி சாலையில் தொப்பூர் மேட்டூர் பவானி ஈரோடு சாலை நடைபாதையுடன் கூடிய வண்டிப்பாதை அகலப்படுத்துதல், மழைநீர் வடிகால் அமைத்தல் மற்றும் உயர் மட்ட பாலம் ரூ.33.62 கோடி மதிப்பீட்டில் கட்டும் பணிகளை தொடங்கி வைத்தார். உடன் ஈரோடு நாடாளுமன்ற உறுப்பினர் கே.இ.பிரகாஷ், சட்டமன்ற உறுப்பினர் வி.சி.சந்திரகுமார், துணை மேயர் வே.செல்வராஜ், மண்டல தலைவர் பி.கே.பழனிசாமி, மாமன்ற உறுப்பினர் புனிதா சக்திவேல், ஈரோடு மாநகராட்சி ஆணையாளர் அர்பித் ஜெயின், பகுதி செயலாளர்கள் வி.சி. நடராஜன், பொ.இராமச்சந்திரன் உட்பட பலர் உள்ளனர்.



# தி.மு.க. இளைஞர் அணி

## மாண்புமிகு துணை முதலமைச்சரும், கழக இளைஞர் அணிச் செயலாளருமான திரு.உதயநிதி ஸ்டாலின் அவர்களின் சுற்றுப்பயண அறிவிப்பு

மாண்புமிகு துணை முதலமைச்சரும், கழக இளைஞர் அணிச் செயலாளருமான திரு.உதயநிதி ஸ்டாலின் அவர்கள் அரசு மற்றும் கழக நிகழ்ச்சிகளில் பங்கேற்க, திருச்சி மற்றும் திண்டுக்கல் மாவட்டங்களுக்கு இரண்டு நாள் சுற்றுப்பயணம் மேற்கொள்கிறார். அங்கு அவர் கலந்துகொள்ளும் நிகழ்ச்சிகளின் விவரம் வருமாறு:

**08.10.2025 புதன்கிழமை**

| நேரம் | நிகழ்ச்சி | இடம் |
|---|---|---|
| காலை 11.00 மணி | திருவரங்கம் தொகுதிக்கு உட்பட்ட கிளை, வட்டச் செயலாளர் - பாக முகவர்கள் உள்ளிட்ட கழக நிர்வாகிகளுடன் கலந்துரையாடல் | கலைஞர் அறிவாலயம், திருச்சி. |
| மாலை 04.30 மணி | அரசு ஆய்வுக் கூட்டம் | மாவட்ட ஆட்சியர் அலுவலகம், திண்டுக்கல். |
| மாலை 06.15 மணி | மாநில அளவிலான விளையாட்டுப் போட்டிகள் - பரிசளிப்பு விழா | பி.எஸ்.என்.ஏ. பொறியியல் கல்லூரி, திண்டுக்கல். |
| மாலை 06.45 மணி | திண்டுக்கல் தொகுதிக்கு உட்பட்ட கிளை, வட்டச் செயலாளர் - பாக முகவர்கள் உள்ளிட்ட கழக நிர்வாகிகளுடன் கலந்துரையாடல். | சி.கே.சி.எம். திருமண மண்டபம், திண்டுக்கல். |

**09.10.2025 வியாழக்கிழமை**

| நேரம் | நிகழ்ச்சி | இடம் |
|---|---|---|
| காலை 10.00 மணி | வேடசந்தூர் ஒன்றியச் செயலாளர் இரா.சாமிநாதன் இல்லத் திருமண விழா | வேடசந்தூர், திண்டுக்கல். |
| காலை 11.00 மணி | வேடசந்தூர் அரசு புதிய மருத்துவமனை திறப்பு விழா & நலத்திட்ட உதவிகள் வழங்குதல் | வேடசந்தூர் அரசு மருத்துவமனை, திண்டுக்கல். |
| மாலை 05.00 மணி | துறையூர் தொகுதிக்கு உட்பட்ட கிளை, வட்டச் செயலாளர் - பாக முகவர்கள் உள்ளிட்ட கழக நிர்வாகிகளுடன் கலந்துரையாடல். | ஏ.வி.எஸ். திருமண மண்டபம், துறையூர், திருச்சி. |

"அன்பகம்"
தேனாம்பேட்டை
சென்னை-18
நாள் : 07.10.2025

கலைஞர் 100 1924 - 2023



# டெல்லி முதலமைச்சர் ரேகா குப்தா பேச்சு வெறுக்கத்தக்கது:

## கனிமொழி கருணாநிதி எம்.பி பதிலடி!

சென்னை, அக்.8-

பிராமணர்கள்தான் நமது சமூகத்தில் அறிவு தீபத்தை ஏற்றுபவர்கள். பிராமணர்கள் சாஸ்திரங்களை மட்டுமல்ல, அஸ்திரங்களையும் வணங்கினர். ஆயுதங்களும் சாஸ்திரங்களும் மட்டுமே நாட்டைப் பாதுகாக்க முடியும். மதத்தைப் பரப்பி, நல்ல பண்புகளை வளர்ப்பதன் மூலம், பிராமண சமூகம் எப்போதும் சமூகத்தின் நன்மைக்காகவே பாடுபட்டுள்ளது. எனவே எந்த அரசாங்கம் ஆட்சியில் இருந்தாலும் பிராமண சமூகத்தின் நலனுக்காக பாடுபட வேண்டும்" என்று டெல்லி முதல்வர் ரேகா குப்தா தெரிவித்தார்.



இந்த நிலையில், திமுக துணைப் பொதுச்செயலாளரும், நாடாளுமன்ற திமுக குழுத் தலைவருமான கனிமொழி கருணாநிதி, தனது சமூக வலைதளப் பக்கத்தில் வெளியிட்ட பதிவு வருமாறு:-

சாதி அமைப்பைப் போற்றுவதும், ஒரு குறிப்பிட்ட சாதியின் பெருமையை உயர்த்தி பேசுவதும் இந்த நாட்டின் சாபக்கேடான விஷயமாகும். சாதியின் பெயரால் பலர் கொல்லப்பட்ட பிறகும், தேர்ந்தெடுக்கப்பட்ட மக்கள் பிரதிநிதியான டெல்லி முதலமைச்சர் ரேகா குப்தா அந்த சாதி அமைப்பை புகழ்ந்து பேசுவது வெறுக்கத்தக்கது, வெட்கக்கேடானது மற்றும் தேசவிரோதமானது.

இதே பிளவை தான் பாஜக திட்டமிட்டு ஆழப்படுத்திக் கொண்டிருக்கிறது. இந்த அடக்குமுறையை ஒழிக்க பெரியார் வாழ்நாள் முழுக்கப் போராடினார்; சமீபத்தில், தமிழ்நாடு ஆளுநர் "தமிழ்நாடு ஏன் போராடுகிறது?" என்று கேட்டார். அவருக்குப் புரிந்து கொள்ள வேண்டியது, இந்தப் போராட்டம் நாங்கள் ஒருபோதும் நிறுத்தமாட்டோம் என்பதை அவர் புரிந்து கொள்ள வேண்டும்.

இவ்வாறு கனிமொழி கருணாநிதி எம்.பி. பதிவிட்டுள்ளார்.





காஞ்சிபுரம் மாவட்டம் உத்திரமேரூர் சட்டமன்ற தொகுதி காஞ்சிபுரம் ஊராட்சி ஒன்றியம் அசூர் ஊராட்சியில் உங்களுடன் ஸ்டாலின் முகாமில் மாவட்ட கழக செயலாளர் க.சுந்தர் எம்.எல்.ஏ. கலந்து கொண்டு பார்வையிட்டு முகாமில் தீர்வு கண்ட மனுக்கள் பயனாளிகளுக்கு சான்றிதழ்கள் வழங்கினார்.
உடன் வட்டாட்சியர் மோகன் குமார், ஒன்றிய குழு பெருந்தலைவர் திருமதி. மலர்கொடி குமார், ஒன்றிய செயலாளர் க.குமணன், ஒன்றிய குழு துணை தலைவர் திருமதி. திவ்யப்பிரியா இளமது, ஊராட்சி மன்ற தலைவர் திருமதி. சசிகலா தேவ்ஆனந்த் மற்றும் ஒன்றிய கழக நிர்வாகிகள் உள்ளாட்சி பிரதிநிதிகள் கலந்து கொண்டனர்.